**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No.499 /2025**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw3/ Pw3 |
| Name | : Selvam |
| Father/Husband's Name | : Ramanjal |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 61 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் செங்கல்பட்டு மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக இருந்து 31.05.2025ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். நான் கடந்த 30.04.2023 அன்று மாலை 4.00 மணியளவில் செங்கல்பட்டு மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, எனக்கு கிடைத்த ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், நான் மற்றும் என்னுடன் சுரேஷ்குமார் தலைமை காவலர் 212, தங்கராஜ் காவலர் 231 ஆகியோர்களுடன் ஒழலூர் கிராமம் குளக்கரை அருகே மாலை 17.45 மணியளவில் ரோந்து பணியிலிருந்தபோது, அருகிருந்த ரகசிய தகவலாளி அடையாளம் காட்ட, ஆஜர் எதிரியை விசாரித்தபோது, அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னதால், அவரை சோதனை செய்ய போவதாக சொல்லி மேற்படி, எதிரியிடம் நான் உன்னை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், அவரை சோதனை செய்த போது, அவர் பாக்கெட்டில் 100 கிராம் கஞ்சா வைத்திருந்தார். பொது மக்கள் சாட்சிகள் யாரும் அங்கு இல்லாததால், அதை நான் மேற்சொன்ன சுரேஷ்குமார் மற்றும் தங்கராஜ் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். அதன் பிறகு

எதிரியை கைது செய்து, கைப்பற்றப்பட்ட பொருள் மற்றும் எதிரியுடன் நிலையம் சேர்ந்து, எதிரி மீது நிலைய குற்ற எண்.223/2023 8(c),20(b)(ii)(A) NDPS act ன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரியை உரிய பாராவசம் ஒப்படைத்து, இருநபர் ஜாமீனில் விடுவித்தேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம் 91 **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 200 கிராம் கஞ்சா **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து, மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.1 ற்கு கொடுத்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. கைப்பற்றப்பட்ட பொருளை தடய அறிவியல் துறைக்கு அனுப்பி சான்று பெற்றேனா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிரியை ஒழலூர் கிராம குளக்கரை வைத்து கைது செய்து வாக்குமூலம் எழுத்துமூலமாக பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கஞ்சாவை புகைப்படமோ அல்லது வீடியோ எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வழக்கிற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் காவல்நிலையத்தில் வைத்து தயாரித்தேன் என்றாலும், புள்ளவிவர கணக்கிற்க்காக போடப்பட்ட வழக்கு என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும் சரியல்ல. எதிரியை கைது செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் போடப்பட்ட தவறான வழக்கு என்றாலும், அவ்வாறு உண்மையாக சம்பவம் நடந்திருந்தால், கைப்பற்றப்பட்ட பொருளை ஆய்வுக்கு அனுப்பி இருப்பேன் என்றாலும், புகைப்படம் எடுத்திருப்பேன் என்றாலும், அவ்வாறு சம்பவம் நடக்காததால் ஆய்வுக்கு அனுப்பவில்லை, புகைப்படம் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/- S. Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.